


ம மறியலில் ஈடுபட்ட போது எடுத்த படம்.

ரி மாணவன் மர்மசாவு:

# லை வாங்க மறுத்து

# னர்கள் ரெயில் மறியல்

விசாரணை நடத்த கோரிக்கை



ில் ஈடுபட்ட ஒரு பெண்ணை போலீசார்
ம் காட்சி.

## றை அதிகாரிகள் விசாரணை

மாணவன் முகிலன் கிணற்றில் இறந்து கிடந்
ாவட்ட முதன்மை கல்வி அலுவலர் புண்ணிய
்வித்துறை அதிகாரிகள் பள்ளிக்கு சென்று
சிரியர்கள் மற்றும் மாணவர்களிடம் விசாரணை
இந்த விசாரணை அறிக்கையை பள்ளிக்கல்வி
அனுப்பி வைத்தனர். இதேபோல் போலீசாரும்
ங்கி உள்ள மாணவர்களிடம் தனித்தனியாக
னர்.
ா தங்கி இருந்த அறையில் ஏதேனும் கடிதம்
ோதனை நடத்தினர்.

து நிவார
வண்டும்,
சாரணை
எனக்கூறி
மருத்துவ
திருப்பத்
செல்லும்
போராட்
ன்றனர்.

ல்

ன யின்
வைக்க

போராட்டத்தில் ஈடுபட்டனர்.

### 30 நிமிடம் தாமதம்

இதையடுத்து திருப்பத்தூர் துணைபோலீஸ் சூப்பிரண்டு சவுமியா தலைமையிலான போலீசார் மற்றும் திருப்பத்தூர் ரெயில்வே போலீசார் அவர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தினர். ஆனால் முகிலனின் உறவினர்கள் போலீசாரிடம் வாக்குவா

# தி.மு.க.வில் இணைகிறாரா?

## ஓ.பன்னீர்செல்வம் விளக்கம்

சென்னை, ஆக.5-

'தி.மு.க.வில் நான் இணையப்போவதாக வதந்தி பரப்பப்படுகிறது. அதில் எள்ளளவும் உண்மையில்லை' என்று ஓ.பன்னீர்செல்லம் விளக்கம் அளித்துள்ளார்.

இதுதொடர்பாக முன்னாள் முதல்-அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

### தி.மு.க.வின் 'பி' டீமா?

ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று இல்லம் திரும்பியவர்களை, அவர்களின் இல்லம் தேடி சென்று நலம் விசாரிப்பதும், உயிரிழந்தவர்களின் உறவினர்களை சந்தித்து துக்கம் விசாரித்து அஞ்சலி செலுத்துவதும், தமிழ் பண்பாடு. முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் உடல் நலக்குறைவு காரணமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, பல்வேறு சிகிச்சைகளுக்கு பிறகு, பூரண குணம் அடைந்து இல்லம் திரும்பினார்.

இந்தநிலையில் அவரது வீட்டுக்கு நேரில் சென்று நலம் விசாரித்தேன். இதேபோன்று அவரின் மூத்த சகோதரர் மு.க.முத்து மறைவு குறித்து இரங்கல் தெரிவித்தேன். இந்த சந்திப்பு, தமிழ் பண்பாட்டின் வெளிப்பாடு. என்னுடைய மனைவியும், என்னுடைய தாயாரும் இறந்தபோது, என்னை நேரில் சந்தித்து முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆறுதல் கூறியவர்.



ஓ.பன்னீர்செல்வம்

இந்த சந்திப்பில் எந்தவித அரசியலும் இடம் பெறவில்லை. ஆனால், இந்த சந்திப்பை வைத்து என்னை தி.மு.க.வின் 'பி டீம்' என்றும், நான் தி.மு.க.வுடன் கூட்டணி அமைக்கப்போவதாகவும், தி.மு.க.வில் சேரப்போவதாகவும் பல்வேறு வதந்திகளை சமூகவலைதளங்கள் வாயிலாக பரப்பும் நடவடிக்கைகளை சிலர் மேற்கொண்டு வருகின்றனர். இதில் எள்ளளவும் உண்மையில்லை.

### ஜெயலலிதா ஆட்சி

என்னை பொறுத்தவரையில், எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோரின் வழியில் பயணிப்பவன். 2026-ம் ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில், ஜெயலலிதா ஆட்சியை அமைக்க வேண்டும் என்பதுதான், எங்களின் நோக்கம். அதற்கான நடவடிக்கைகளை எடுப்போம் என்பதை உறுதிப்பட தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் பண்பாட்டை நிலைநிறுத்தும் வகையில் நான் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்தேனே தவிர, இதில் துளியும் அரசியல் ஏதுமில்லை. இதனை வைத்து அரசியல் ஆதாயம் தேட நினைப்பவர்களை பார்க்கும்போது, அண்ணாவின் பொன்மொழியான, 'பண்பு தெரிந்தவர்கள் பாராட்டுகிறார்கள். அது இல்லாதவர்களை பற்றி கவலைப்பட வேண்டாம்' என்பதுதான் நினைவுக்கு வருகிறது.

### தமிழக மக்கள் நலன்

அடுத்தபடியாக, சமக்ரா சிக்சா திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு அளிக்கவேண்டிய நிதி சம்பந்தமாக, நான் ஏதோ இப்போதுதான், அறிக்கை வெளியிடுவதுபோல சில விமர்சனங்கள் எழுகின்றன. இது முற்றிலும் தவறு. சமக்ரா சிக்சா திட்டத்திற்கான நிதியை விடுவிக்குமாறு, மத்திய அரசை வலியுறுத்தி கடந்த ஆண்டு ஆகஸ்டு 29-ந் தேதி அன்றே அறிக்கை வெளியிட்டுள்ளேன்.

பெரியார், அண்ணா குறித்து விமர்சித்த இந்து முன்னணியை கண்டித்தும் அறிக்கை வெளியிட்டு உள்ளேன். ஜெயலலிதாவை, பா.ஜனதாவின் முன்னாள் தலைவர் விமர்சித்த போதும் கண்டனம் தெரிவித்தேன். நான் எங்கு இருந்தாலும், தமிழக மக்களின் உரிமை, தமிழக மக்களின் நலன் என்று வந்துவிட்டால், ஜெயலலிதா வழியில் செயல்பட கூடியவன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

போலீஸ் சூப்பிரண்டுடன் புஸ்சி ஆனந்த் சந்திப்பு:

# மதுரை த.வெ.க. மாநாடு 21-ந் தேதி மாற்றம்?

## இன்று அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகிறது

மதுரை, ஆக.5-

விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக்கழகத்தின் முதல் மாநாடு, விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி அருகே உள்ள வி.சாலை கிராமத்தில் கடந்த ஆண்டு நடந்தது. இந்த நிலையில் 2-வது மாநில மாநாட்டை மதுரை-தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலை எலியார்பத்தி சுங்கச்சாவடி பகுதி அருகே பாரபத்தி பகுதியில் வருகிற 25-ந் தேதி நடத்த திட்டமிடப்பட்டன. இதனிடையே மாநாடு நடைபெறும் 25-ந்தேதியை தொடர்ந்து 27-ந்தேதி விநாயகர் சதுர்த்தி வர இருப்பதாகவும், அதற்கு போலீஸ் பாதுகாப்பு வழங்க வேண்டியதிருப்பதால், மாநாடு நடைபெறும் தேதியை மாற்றி அமைக்க வேண்டும் என போலீஸ் தரப்பில் இருந்து விஜய் கட்சிக்கு வலியுறுத்தப்பட்டது.

இந்த நிலையில் கட்சியின் பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த் நேற்று மதுரைக்கு வந்து போலீஸ் சூப்பிரண்டை சந்தித்து, மாநாடு தேதி தொடர்பாக பேசினார்.

கிறது. மேலும், வருகிற 21-ந்தேதி மாநாடு நடத்தப்படும் என கட்சி நிர்வாகிகள் சமூக வலைதளங்களில் தங்களது கருத்துகளை பகிர்ந்து வருகின்றனர்.


इंडियन बैंक Indian Bank
इलाहाबाद ALLAHABAD

**இந்தியன் வங்கி**
மண்டல அலுவலகம், வேலூர், பேர்ல் ஆர்கேட்
2வது தளம், 8வது கிழக்கு பிரதான சாலை
தொலைபேசி எண்: 0416-2249620

**ஆலங்காயம் கிளைக்கான அலுவலகத்தை குத்தகைக்கு எடுப்பதற்கான டெண்டர்களை அழைக்கும் அறிவிப்பு**

பொதுத்துறை வங்கியான இந்தியன் வங்கி 1900 சதுர அடி வரையிலான திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள ஆலங்காயத்தில் குத்தகை அடிப்படையில் (உடனடியாக கட்டப்பட்ட / கட்டுமானத்தில் உள்ள) அலுவலக வளாகங்களின் உரிமையாளர்களிடமிருந்து 2 ஏல முறையின் (தொழில்நுட்ப மற்றும் நிதி ஏலம்) டெண்டர்களை அழைக்கிறது. தரைத்தளத்தில் கார்பெட் ஏரியாவில் பார்க்கிங் வசதியுடன் 15 வருட குத்தகைக் காலத்திற்கு கிளை அமைக்கலாம்.

டெண்டர் படிவங்களை பின்வரும் முகவரியில் இருந்து 5.8.2025 முதல் 18.8.2025 வரை ரூ.250 (திருப்பி பெற முடியாதது) செலுத்தி இந்தியன் வங்கி, மண்டல அலுவலகம், வேலூர் என்ற முகவரிக்கு DD/IOI மூலம் பெறலாம். ஏலங்களை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி 18.8.2025 (மாலை 3 மணி). டெண்டர் மற்றும் டெண்டர் படிவங்களின் விவரங்களை எங்கள் வலைத்தளமான www.indianbank.in இல் பெறலாம்.

எந்தவொரு காரணத்தையும் கூறாமல் ஏதேனும் அல்லது அனைத்து சலுகைகளையும் நிராகரிக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

DGM / மண்டல மேலாளர்
வளாகத் துறை, வேலூர்